
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**1184**

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# ‘மைனாரிட்டி’ தி.மு.க.

**மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா**

**61**

தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுபூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்

இந்தியா சுதந்திரமடைந்தபோது, இப்போதிருக்கும் அனைத்து மாநிலங்களும் இந்தியாவுடன் இணையவில்லை. சில மாநிலங்கள் பாகிஸ்தானுடன் இணைய விரும்பின, சில மாநிலங்கள் சுதந்திரமாக இருக்க விரும்பின. இந்தியாவுடன் இணைய மறுத்த மாநிலங்களில் முக்கியமானது, ஹைதராபாத். 1947-ஆம் ஆண்டில் இந்தியா சுதந்திரம் பெற்றபோது, நிஜாம் மிர் உஸ்மான் அலியின் ஆட்சியின்கீழ், ஹைதராபாத் இருந்தது. ஹைதராபாத்தின் நிஜாம், இந்தியா அல்லது பாகிஸ்தான் இருபுறமும் இணைய விரும்பவில்லை. நிஜாமுக்கு ஆதரவாக, ‘ரசாகர்கள் படை’ உருவானது. ஹைதராபாத்தை, இந்தியாவுடன் இணைப்பதற்கான இந்தப் போராட்டத்தின் முடிவு, இஸ்லாமியர்களின் இருத்தலுக்கு எதிரானதாக மாறியது.

குறிப்பாக, காந்தி படுகொலைக்குப் (1948 ஜனவரி 30) பிறகு, அதே ஆண்டில் இஸ்லாமியர்களுக்கு எதிராக நடந்த மிக முக்கியமான மற்றும் மிகப்பெரிய வன்முறைச் சம்பவமாக இது அமைந்தது. ஹைதராபாத் இந்தியாவின் மையப்பகுதியில் அமைந்திருந்ததால், அது தனி நாடாக இருப்பது இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் என்று உள்துறை அமைச்சராக இருந்த சர்தார் வல்லபாய் பட்டேல் கருதினார். இருதரப்பிலான பேச்சு வார்த்தைகள் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து, 1948-ஆம் ஆண்டு செப்டம்பர் 13 அன்று, இந்திய ராணுவம் மூன்று திசைகளிலிருந்தும் ஹைதராபாத்திற்குள் நுழைந்தது. நிஜாமின் படைகளும் ரசாகர்களும் ஐந்து நாட்கள் மட்டுமே தாக்குப்பிடித்தனர். செப்டம்பர் 17 அன்று மாலை, நிஜாம் படைகள் சரணடைந்தன. செப்டம்பர் 18 அன்று, இந்திய ராணுவம் ஹைதராபாத்தை முழுமையாகத் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தது.

ஆனால், பிரச்சினை இத்தோடு முடியவில்லை. இதற்குப் பிறகுதான் அங்கு உண்மையான பிரச்சினை வெடித்தது. ராணுவ நடவடிக்கை முடிந்த பிறகு, ஹைதராபாத்தின் பல்வேறு பகுதிகளில் இஸ்லாமியர்களுக்கு எதிராகப் பெரும் வன்முறை வெடித்தது. வன்முறை குறித்த புகார்கள் எழுந்ததைத் தொடர்ந்து, பிரதமர் நேருவின் உத்தரவின் பேரில், பண்டிட் சுந்தர்லால், காஜி அப்துல் கஃபார் மற்றும் மௌலானா அப்துல்லா மிஸ்ரி ஆகியோர் அடங்கிய குழு, ஹைதராபாத்திற்குச் சென்றது. அந்தக் குழுவின் அறிக்கையின்படி, சுமார் 27,000 முதல் 40,000 பேர் வரை கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. கொள்ளை, பாலியல் வன்முறை மற்றும் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்ட சம்பவங்களும் பதிவாகின.

வன்முறையைத் தடுக்கவேண்டிய ராணுவம் மற்றும் காவல் துறையின் ஒரு பிரிவினர், பல இடங்களில் வன்முறையாளர்களுடன் சேர்ந்து செயல்பட்டதாகவும், வன்முறையை வேடிக்கை பார்த்ததாகவும் அறிக்கை குறிப்பிட்டது. சில இடங்களில் ராணுவத்தினர் பொதுமக்களை ஆயுதங்களை ஒப்படைக்கச் சொல்லிவிட்டு, அதன் பிறகு அவர்களைப் பாதுகாக்கத் தவறியதால் வன்முறைக் கும்பல்கள் எளிதாகத் தாக்குதல் நடத்தின. ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தங்கள் பூர்வீக நிலங்களை விட்டு வெளியேறி நகரங்களுக்குத் தஞ்சம் புகுந்தனர். அரசுப் பணிகளில் இருந்த இஸ்லாமியர்கள் பெருமளவில் பணிநீக்கம் செய்யப்பட்டனர் அல்லது கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்டனர். இது அந்தச் சமூகத்தின் பொருளாதார நிலையைப் பின்னுக்குத் தள்ளியது.




## சிறுபான்மையினரை அச்சுறுத்துவது, ஏற்புடையதல்ல...

ஹைதராபாத்திற்குள் ராணுவம் நுழைந்ததற்கு இரண்டு நாட்களுக்கு முன்பாகத்தான் ஜின்னா மறைந்தார். ஜின்னாவின் மறைவு, பெரியாரைக் கடுமையாகப் பாதித்திருந்தது. ‘குடிஅரசு’ ஏட்டிலும், ‘விடுதலை’ நாளிதழிலும் ஜின்னாவிற்காக உருகி உருகி பல கட்டுரைகளும் இரங்கல் பதிவுகளும், ஜின்னாவின் வாழ்க்கையைப் போற்றும் செய்திகளும் வந்து கொண்டிருந்தன. அந்த வேளையில், தமிழ்நாடு இரண்டாம் இந்தி எதிர்ப்புப் போராட்டக் களத்தையும் கண்டுகொண்டிருந்தது. தன்னைச் சந்திக்க வருமாறு பெரியாரை அழைத்த அன்றைய முதலமைச்சர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார், “ஹைதராபாத் பிரச்சினைப் போராட்டம் துவக்கப்பட்டால் என்ன செய்வது?” எனக் கேட்டார். “என் நாட்டின் சுதந்திரத்தை முன்னிட்டு, இந்தக் கிளர்ச்சியைச் செய்கிறேன்; ஹைதராபாத் போராட்டம் துவக்கப்பட்டால், என் கிளர்ச்சியை நிறுத்திக் கொள்வேன்” என்று பதிலளித்தார் பெரியார். இதற்கிடையில்தான், ஹைதராபாத்தில் ராணுவம் நுழைந்தது. முதல்வரிடம் உறுதி அளித்ததைப் போலவே, மறியலை தற்காலிகமாக நிறுத்தினார் பெரியார். எனினும், 15-ஆம் தேதி ஒருநாள் மட்டும் அடையாள மறியல் நடைபெற்றது. அன்றுதான் தயாளு அம்மையாருக்கும் முத்தமிழறிஞர் கலைஞருக்கும் திருவாரூரில் திருமணம். திருமணத்தைக்கூட பொருட் படுத்தாமல், தன் வீட்டின் வழியாகச் சென்ற இந்தி எதிர்ப்பு ஊர்வலத்தில் கலைஞர் பங்கெடுத்தார்.

### ‘விடுதலை’ இதழில்...

ஹைதராபாத் தொடர்பான ஒன்றிய அரசின் கருத்துகள், பிரிட்டனின் கருத்துகள், பிற நடவடிக்கைகள் அனைத்தும் ஒவ்வொரு நாளும் ‘விடுதலை’ இதழில் பதிவாகி உள்ளன. குறிப்பாக, ஹைதராபாத்திற்கு ராணுவப் படையை அனுப்ப இந்திய அரசுக்கு உரிமையில்லை என்ற நிஜாம் அரசின் நிலைப்பாடும், ‘விடுதலை’யில் செய்தியாகி உள்ளது. அவ்வாண்டு செப்டம்பர் 7-ஆம் நாள் ‘விடுதலை’ இதழில், ராணுவத்தை அனுப்பிவைப்பது தொடர்பாக, நாடாளு மன்றத்தில் பிரதமர் ஜவஹர்லால் நேரு கூறியதற்கு, ஹைதராபாத் துணைப் பிரதமராக இருந்த பிங்கிள் வெங்கட்ரமணா ரெட்டி, அதற்கு எந்த உரிமையும் இல்லை எனப் பதிலளித்திருந்தார்.

> “நிஜாமுக்கு எதிரான போரில், அப்பாவி இஸ்லாமியர்கள் கொல்லப்பட்டதை பெரியார், அண்ணா இருவரும் எதிர்த்தனர்.”

அதே சமயம், மோதல் நடந்த சமயத்தில் ஹைதராபாத் சமஸ்தானத்தில் ஓடும் டாக்சிகள், பேருந்துகள், பிற வாகனங்கள் அனைத்தும் தங்கள் பார்வையின் கீழ் கொண்டுவரப்படும், தங்கள் தேவைக்கு வாடகைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்ற நிஜாம் அறிவிப்பு திமிர்த்தனமானது என்றும் ‘விடுதலை’ ஏடு கண்டித்தது. ராணுவத்தைச் சமாளிக்க முடியாமல் நிஜாம் ஹைதராபாத்தை விட்டு ஓட்டம் பிடிப்பார் என்ற செய்திகளும் வந்தன. நிஜாம் சரணாகதி அடைந்ததையும் வரவேற்று எழுதப்பட்ட செய்திகளும் காணக்கிடைக்கின்றன. அதே காலகட்டத்தில், ‘திராவிட நாடு’தான் தெற்கின் விடுதலையைத் தீர்மானிக்கும் என்ற கருத்தை, பெரியார் உறுதியோடு முன் வைத்திருக்கிறார். ‘திராவிட நாடு’ கோரிக்கைக்கு முஸ்லிம்கள் ஆதரவாக இருக்க வேண்டுமென்று, 25.09.1948 செப்டம்பர் ‘குடி அரசு’ இதழில், ‘திராவிட முஸ்லிம்களே’ என்ற தலைப்பில், எஸ்.எம்.பாஷா மிக நீண்ட கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார். திராவிட நாட்டைக் காண்பது நமது பிறப்புரிமை, திராவிட நாட்டைச் சேர்ந்த முஸ்லிம்கள் அனைவரும் அதற்காகப் பாடுபட வேண்டுமென்று வலியுறுத்துகிறது அக்கட்டுரை.

நிஜாம் ஆதிக்கம் தொடர்வதை பெரியார், அண்ணா இருவரும் விரும்பவில்லை; மக்களாட்சி மலர வேண்டுமென்பதே அவர்களின் நோக்கமாக இருந்தது. அதற்காக ஹைதராபாத் வடவர் ஆதிக்கத்தில் வீழ வேண்டுமென்றும் இருவரும் கருதவில்லை. ஹைதராபாத்தை மொழிவாரி மாநிலமாகப் பிரிக்க எதிர்ப்பு தெரிவிக்கிறார் நேரு என்ற கருத்தையும் ‘விடுதலை’ இதழ் வெளிப்படுத்தியுள்ளது. நிஜாமுக்கு எதிரான போரில், அப்பாவி இஸ்லாமியர்கள் கொல்லப்பட்டதை பெரியார், அண்ணா இருவரும் எதிர்த்தனர். நிஜாமை வீழ்த்துவதற்கான இந்த முயற்சிகளில் மதவாதம் தலைதூக்கி, சிறுபான்மையினரை அச்சுறுத்துவது ஏற்புடையதல்ல என்பதே இருவரின் கருத்தாக இருந்தது.

...நீளும்

## பெரியார், அண்ணா, கலைஞர் பெயரில் சான்றிதழ் படிப்புகள்!

சேலம், பெரியார் பல்கலைக்கழகத்திலுள்ள தந்தை பெரியார் ஈ.வெ.இராமசாமி இருக்கை, பேரறிஞர் அண்ணா இருக்கை மற்றும் முத்தமிழறிஞர் தமிழவேள் கலைஞர் மு.கருணாநிதி ஆய்வு மையத்தின் சார்பாக நடத்தப்பெறும் திராவிட இலக்கியம் மற்றும் இதழியல் என்னும் ஓராண்டுப் பகுதி நேர முதுநிலை பட்டயப் படிப்பிற்கும், பெரியாரியல், அண்ணாவியல், கலைஞரியல் ஆகிய ஆறு மாத கால மூன்று பகுதி நேரச் சான்றிதழ் படிப்புகளுக்குமான 2026-2027-ஆம் கல்வியாண்டுக்கான மாணவர் சேர்க்கை அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

திராவிட இலக்கியம் மற்றும் இதழியல் என்னும் ஓராண்டுப் பகுதி நேர முதுநிலை பட்டயப் படிப்பு இரண்டு பருவங்களைக் கொண்டது. முதற்பருவத்தில், ‘திராவிட இயக்க வரலாறு’, ‘திராவிட இலக்கியம்’, ‘திராவிட இதழியல்’, ‘உலகத் தத்துவ மரபில் திராவிடவியல்’, ‘திராவிடவியலும் சமூக வளர்ச்சியும்’ ஆகிய ஐந்து தாள்களும், இரண்டாம் பருவத்தில், ‘திராவிட இலக்கிய அழகியல்’, ‘திராவிட இதழ்களின் நடையியல்’, ‘திராவிடக் கலை ஊடகங்கள்’, ‘திராவிடத் தத்துவவியல்’, ‘திராவிடவியல் ஆய்வுகள்’ ஆகிய தாள்களும் உள்ளன.

பெரியாரியல், அண்ணாவியல், கலைஞரியல் ஆகிய ஆறு மாத கால மூன்று பகுதி நேரச் சான்றிதழ் படிப்புகளில் சேர்ந்திட, மாணவர்கள் பன்னிரண்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். மேற்கண்ட படிப்புகளுக்கான வகுப்புகள் மாதம் இருமுறை சனிக்கிழமை நாட்களில் நேரடி வகுப்புகளாக நடத்தப்படும். இந்தப் படிப்புகளில் சேர, வயது வரம்பு இல்லை. இவற்றில் சேர விரும்புவோர், பெரியார் பல்கலைக்கழக இணையதளப் பக்கத்திலுள்ள விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்து, அதனைப் பதிவிறக்கம் செய்து, அவ்விண்ணப்பத்துடன் குறிப்பிடப்பட்டுள்ள உரிய சான்றிதழ் நகல்களை இணைத்து, இயக்குநர், தந்தை பெரியார் இருக்கை, பேரறிஞர் அண்ணா இருக்கை, முத்தமிழறிஞர் கலைஞர் ஆய்வு மையம், பெரியார் பல்கலைக்கழகம், சேலம் - 636 011 என்னும் முகவரியில் நேரிலோ அல்லது அஞ்சல் வழியிலோ சேர்த்திட வேண்டும்.

விண்ணப்பிக்க இறுதி நாள்: 31.05.2026. விண்ணப்பம் வந்து சேரவேண்டிய இறுதி நாள்: 10.06.2026. மேலும் விவரங்களுக்கு, இயக்குநர் இரா.சுப்பிரமணி மற்றும் முனைவர் ரா.சிலம்பரசன், மதிப்புறு விரிவுரையாளர் (80121-93831) ஆகியோரைத் தொடர்பு கொள்ளவும்.

## ஃப்ளாஷ்பேக்



சிற்பி.சரவண அபிராம்



### கலைஞர் வாழ்த்தும் வாழ்க்கையும்...

1998 -ஆம் ஆண்டு, தமிழ்நாடு அளவில் அரசு நடத்திய ஓவியப் போட்டியில் 8-ஆம் வகுப்பு மாணவனான நான் முதல் பரிசுக்குத் தேர்வாகி, ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற சுதந்திர தின விழா நிகழ்ச்சியில், ஆளுநர் பாத்திமா பீவி பரிசுக் கோப்பையை வழங்கினார். என் ஓவியத்தைப் பார்த்து, அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பாராட்டினார். நிகழ்ச்சியில், என் தோளைத்தட்டி“ஓவியக்கலையால் நீ உலகப் புகழ் பெறுக” என வாழ்த்தினார். அந்த மாமனிதரின் வாழ்த்து, என்னை ஊக்குவித்து இன்று திரைப்படத் துறையில் கலை இயக்குநராகப் பணியாற்றப் பக்கபலமாய் உள்ளது.

**- சிற்பி.சரவண அபிராம், திரைப்படக் கலை இயக்குநர், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## ம்லூ௫க

### எப்போது பிரிந்தோம்?

1967-இல் தி.மு.க. முதன்முதலாக ஆட்சி அமைத்த பின்னர், கிருஷ்ணகிரி மாவட்டம், நாகரசம்பட்டியில் பள்ளிக்கூட கட்டடத் திறப்புவிழா ஒன்றில் ஒன்றாகக் கலந்துகொண்டனர். ‘அய்யாவும் அண்ணாவும் ஒன்றாக வந்து நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும் காட்சி சிறப்பாக உள்ளது’ என க.ராசாராம் பேச, “நாங்கள் எப்போது பிரிந்தோம்? என் உள்ளத்தில் அவர் இருப்பார். அவர் உள்ளத்தில் என்றும் நான் இருப்பேன். அய்யா இப்போது கட்டளை இட்டாலும் அவருடன் சென்று சமூகப் பணியாற்றத் தயாராக உள்ளேன்” என்று பதிலளித்தார் அண்ணா.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900